தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1977, ஜூலை 30.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று வினாக்கள் இல்லை.

(1) அரசினர் தீர்மானங்கள்.

(அ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 173-வது விதியின் கீழ், 1977-78 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்''

என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(2) அறிவிப்புகள்.

(அ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், பொதுக் கணக்குக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத்தாள்களை 5-8-1977 வெள்ளிக்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் சயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்பு தாள்கள் 6—8—1977 சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 8—8—1977 திங்கட்கிழமை முற்பகல் 11 -மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது 16-க்கு மேற்படுமாயின் 10—8—1977 புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே தலைமைச் செயலகத்திலுள்ள பேரவை குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(1) அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி).

(ஆ) பொது நிறுவனங்கள் குழுவிற்கான தேர்தல்:

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 182-ஏ விதியின் கீழ், 1977-78 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்''.

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(2) அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) பொது நிறுவனங்கள் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், பொது நிறுவனங்கள் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 5—8—1977 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 6—8—1977 சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 8—8—1977 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது 16-க்கு மேற்படுமாயின் 10—8—1977 புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே தலைமைச் செயலகத்திலுள்ள பேரவை குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.